**பிப்ரவரி – 03**

# TNPSC துளிகள்

- பஞ்சாப் அரசாங்கம் அடிப்படைத் தேவைகள் மற்றும் கிராமப்புற உட்கட்டமைப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்கு "பொலிவுறு கிராமத் திட்டம்" என்ற பெயரில் 384.40 கோடி ரூபாய் மதிப்பிற்கு ஒரு ஊரக மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றது.
    - இத்திட்டம் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மற்றும் 14-வது நிதி ஆணையம் ஆகியவற்றிடமிருந்து நிதிகள் பெற்று நிதியுதவி அளிக்கப்படும்.
- இந்தியாவிற்கு நடுத்தர வகையைச் சேர்ந்த தரையிலிருந்து வான் நோக்கி ஏவப்படும் கடற்படை ஏவுகணை ஒன்றை அளிக்க இஸ்ரேல் விமானப்படைத் தொழிற்சாலை, இந்தியக் கடற்படை, கொச்சின் கப்பல் கட்டும் தளம் ஆகியவற்றுக்கு இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
- ராணுவத்தின் பல்மருத்துவப் படைப்பிரிவு பிப்ரவரி 1-ஆம் தேதியன்று 78-வது படைப் பிரிவின் நிறுவன தினத்தைக் கொண்டாடியது.

# தேசியச் செய்திகள்

## 2019 நிதிநிலை அறிக்கை

- மத்திய நிதியமைச்சர் பியூஷ் கோயல் 2019-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதியன்று பாராளுமன்றத்தில் 2019-ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.
- இடைக்கால நிதிநிலை அறிக்கையானது பொதுவாக எந்த ஒரு புதிய திட்டங்களையோ அல்லது புதிய கொள்கை முடிவுகளையோ கொண்டிருக்காது.
- அரசாங்கம் அடுத்த நான்கு முதல் ஐந்து மாதங்களுக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு (Vote on Account – கணக்கின் மீதான வாக்களிப்பு) வேண்டிய நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும்.
- பொதுத் தேர்தலுக்குப் பிறகு ஒரு முழுமையான நிதிநிலை அறிக்கை மக்களவை கூடிய பிறகு தாக்கல் செய்யப்படும்.

### *பட்ஜெட்டின் சில முக்கிய சிறப்பம்சங்கள்*

- 5 லட்சம் வரையிலான வருமானத்திற்கு வருமான வரி கிடையாது.
- 2020-21-ஆம் நிதியாண்டிற்குள் நிதிப் பற்றாக்குறை இலக்கான 3 சதவீதத்தை அடைதல்.
- அனைத்து 22 பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலையை (minimum support price) அதன் உற்பத்தி விலையைப் போல 1.5 மடங்கு உயர்த்துவதற்கான முடிவு.
- பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி யோஜனா என்பதின் கீழ் 12 கோடி சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வருடத்திற்கு 6000 ரூபாய் என்ற அளவில் உறுதியளிக்கப்பட்ட வருடாந்திர வருமானத்தை அளித்தல்.

- 15000 ரூபாய்க்கு குறைவாக வருமானம் கொண்ட அமைப்பு சாராத துறையைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு ஒரு மிகப்பெரிய ஓய்வூதியத் திட்டம். அவர்கள் தமது 60 வயதிற்குப் பிறகு மாதம் 3000 ரூபாய் ஓய்வூதியம் பெற முடியும். இத்திட்டம் பிரதான் மந்திரி ஷிரம்யோகி மன்தன் யோஜனா என்று அழைக்கப்படும்.
- அரசுத் திட்டங்களுக்குத் தேவையான பொருட்களில் 25 சதவிகிதம் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களிடமிருந்தும் குறிப்பாக அதில் மூன்று சதவிகிதம் பெண் தொழில் முனைவோர்களிடமிருந்தும் பெறப்படும்.
- எஞ்சியிருக்கும் அனைத்து சீர்மரபு நாடோடிப் பழங்குடியினரையும் மிக நாடோடிப் பழங்குடியினரையும் அடையாளம் கண்டிட நிதி ஆயோக்கின் கீழ் ஒரு புதிய குழு அமைக்கப்படுதல்.
- தேசிய செயற்கை நுண்ணறிவிற்கான இணைய வாயில் விரைவில் உருவாக்கப்படும்.
- அடுத்த ஐந்து வருடங்களில் ஒரு லட்சம் டிஜிட்டல் கிராமங்கள் திட்டமிடப்படும்.
- அடுத்த இரண்டு வருடங்களுக்குள், வருமானவரித் தாக்கலின் அனைத்து மதிப்பீடுகளும் வரியைச் செலுத்துபவருக்கும் அதிகாரிகளுக்கும் எவ்வித இடையூறுமின்றி மின்னணு முறையில் மாற்றம் செய்யப்படும்.
- அனைத்து வருமானவரித் தாக்கல்களும் 24 மணி நேரத்தில் செயல்முறைப் படுத்தப்பட்டு பணம் திருப்பியளித்தலும் உடனடியாக வழங்கப்படும்.

## பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி

- 2019-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி அனைத்து சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் உறுதியளிக்கப்பட்ட வருமான ஆதரவை அளிப்பதாகும்.




- இத்திட்டத்தின் கீழ் 2 ஹெக்டேர் வரை சாகுபடி செய்யக்கூடிய நிலம் வைத்திருக்கும் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள விவசாயக் குடும்பங்கள் வருடத்திற்கு 6000

ரூபாய் அளவில் நேரடி வருமான உதவி அளிக்கப்படுவர்.

- இந்த வருமான ஆதரவு 2000 ரூபாய் என்று மூன்று சரிசமமான தவணைகளாக விவசாயப் பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக பணப்பரிமாற்றம் செய்யப்படும்.
- இத்திட்டம் 2018-ஆம் ஆண்டு டிசம்பர் 1 முதல் நடைமுறைப்படுத்தப்படும். மேலும் முதல் தவணை 2019-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதிக்குள் செலுத்தப்படும்.


## 2019 – பத்ம விருதுகள்

- 70-வது குடியரசு தினத்திற்கு முன்பாக (25-01-2019) அரசு 2019-ஆம் ஆண்டிற்கான பத்ம விருதுகளை அறிவித்தது.
- பத்ம விபூசன் மற்றும் பத்ம பூசன் ஆகிய விருதுகள் குடிமக்களுக்கு வழங்கப்படுகின்ற முறையே நாட்டின் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலையிலான உயரிய விருதுகளாகும்.
- இந்த வருடம் இந்த பெருமைமிகு விருதுகளுக்கு 112 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இது 4 பத்ம விபூசன், 14 பத்ம பூசன் மற்றும் 94 பத்மஸ்ரீ விருதுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
    - பத்ம விபூசன் விதிவிலக்கான மற்றும் மேன்மைமிகு சேவைக்கு அளிக்கப்படுகின்றது.
    - பத்ம பூசன் உயர்தர சேவைக்கான விருதாகும்.
    - பத்ம ஸ்ரீ என்பது ஏதேனும் ஒரு துறையில் பங்களித்த மேன்மைமிகு சேவைக்கான விருதாகும்.
- விருது பெறுபவர்களில் 21 நபர்கள் பெண்களாவர். மேலும் அப்பட்டியலானது வெளிநாட்டவர்கள் / வெளிநாடு வாழ் இந்தியர்கள் / இந்திய வம்சாவழியினர் / பூர்வகுடி இந்திய மக்கள் ஆகிய பிரிவுகளில் இருந்து 11 நபர்களையும் இறந்து போனவர்கள் பட்டியலில் 3 நபர்களையும் 1 திருநங்கை நபரையும் கொண்டிருக்கும்.
- பத்மஸ்ரீ விருதுகளுக்காக பின்வரும் 7 நபர்கள் தமிழ்நாட்டிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

| **விருது பெறுபவர்கள்** | **பங்களித்த துறைகள்** |
|---|---|
| பங்காரு அடிகளார் | ஆன்மீகம் |
| சரத் கமல் | விளையாட்டு (டேபிள் டென்னிஸ்) |
| நர்த்தகி நடராஜ் | கலை – நடனம் (பரத நாட்டியம்) |
| மதுரை சின்னப் பிள்ளை | சமூக சேவை (நுண் நிதி) |
| ஆனந்தன் சிவமணி | கலை – இசை |
| ராமசுவாமி வெங்கடசுவாமி | மருத்துவம் (அறுவை சிகிச்சை) |

## இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை விகிதம்

- இது ஒரு அலுவல்பூர்வமான ஆய்வு ஆகும். ஆனால் அரசால் இதன் வெளியீடு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
- தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத்தின் (National Sample Survey Office's - NSSO) வழக்கமான தொழிலாளர் பணிக்குழு ஆய்வு அறிக்கையின்படி 2017-18-ஆம் ஆண்டில் இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை விகிதம் 45 வருடத்தில் அதிக அளவாக 6.1 சதவிகிதத்தைத் தொட்டிருக்கின்றது.
- பணமதிப்பிழக்கத்திற்குப் பிறகு அரசு நிறுவனத்தால் வேலைவாய்ப்பின்மை மீது எடுக்கப்பட்ட முதலாவது முழுமையான ஆய்வு இதுவாகும்.




- நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்பின்மை என்பது 7.8 சதவிகிதமாகவும் ஊரகப் பகுதிகளில் 5.3 சதவிகிதமாகவும் உள்ளது. நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்பின்மையானது ஊரகப் பகுதிகளுடன் ஒப்பிடும்போது மிகவும் அதிகமாக உள்ளது.
- 1972-73-ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பின்மை அதன் அதிக அளவில் இருந்தது.
- ஊரக வேலைவாய்ப்பின்மையில் ஆண்களின் சதவிகிதம் 5 சதவிகிதத்திலிருந்து 17.4 சதவிகிதமாகவும் ஊரக வேலைவாய்ப்பின்மையில் பெண்களின் பங்கு 4.8 சதவிகிதத்திலிருந்து 13.6 சதவிகிதமாகவும் உயர்ந்திருக்கின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## கிசான் சுவிதா கடன்

- உஜ்ஜீவன் சிறு நிதியியல் வங்கியால் (Ujjivan Small Finance Bank) சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கிசான் சுவிதா கடன் என்பது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- இதனை விவசாயிகளால் விவசாயத்திற்காகவும் அது சார்ந்த நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.
- உஜ்ஜீவன் சிறு நிதியியல் வங்கி இந்த சேவையை தமிழ்நாடு, மேற்கு வங்கம், கர்நாடகா மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் ஆரம்பித்திருக்கின்றது.
- இந்த கடன் எவ்வித பிணையையும் கொண்டிராது.
- விவசாயம் மற்றும் அது தொடர்பான விவகாரங்களுக்காக கடன் வழங்கும் முதல் சிறு நிதியியல் வங்கியாக உஜ்ஜீவன் உருவெடுத்திருக்கின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## உலகின் மிகப்பெரிய டிஜிட்டல் வானவியல் ஆய்வு

- உலகின் மிகப்பெரிய டிஜிட்டல் வானவியல் ஆய்வுத் திட்ட (Panoramic Survey Telescope and Rapid Response System – அழகிய தொலைநோக்கி ஆய்வு மற்றும் துரிதமான பதில் நடவடிக்கை முறை) அமைப்பிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் இரண்டாவது பதிப்பினை அமெரிக்காவின் விண்வெளி தொலைநோக்கி அறிவியல் கல்வி நிறுவனம் வானவியல் கல்விக்கான ஹவாய் பல்கலைக் கழகத்துடன் இணைந்து வெளியிட்டது.
- இந்த ஆய்வகம் 1.4 பில்லியன் பிக்சல் வசதியுடைய டிஜிட்டல் கேமராவுடன் 1.8 மீட்டர் தொலைநோக்கியைக் கொண்டுள்ளது.
- ஹவாயிலிருந்து எளிதில் புலப்படும் ஒட்டுமொத்த வானத்தையும் ஆய்வு செய்த முதல் ஆய்வு இதுவேயாகும்.

## நீரிழிவு நோயாளிகளுக்கு செயற்கையான கணையத்திற்கான கைபேசி செயலி

- நீரிழிவு நோயாளிகளுக்கு தங்கள் குளுக்கோஸ் அளவுகளை ஆய்வு செய்வதில் உதவிடும் வகையில் ஒரு செயற்கையான கணையத்திற்கான கைபேசி செயலி ஒன்றை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.
- இந்த செயலி குளுக்கோஸ் அளவீட்டுக் கருவிகள், இன்சுலின் உட்செலுத்துக் கருவிகள் மற்றும் முடிவுகள் எடுக்கும் வழிமுறைகள் ஆகியவற்றுடன் இணைக்கப்படும் திறன் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கின்றது.
- இந்த செயலி அமைப்பானது ஒரு டெசி லிட்டருக்கு 70 முதல் 180 மைக்ரோ கிராம்கள் வரையிலான குளுக்கோஸ் வரம்புடன் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

# முக்கிய தினங்கள்

## இந்தியக் கடலோரக் காவல்படை தினம் – பிப்ரவரி 1

- 2019 - ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதியன்று இந்தியக் கடலோரக் காவல்படை (The Indian Coast Guard - ICG) தனது 42-வது நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதியன்று தற்காலிகமாக இந்தியக் கடலோரக் காவல்படையானது இந்திய உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் வகையில் இருக்கும் கடல்சார்ந்த கடத்தலைத் தடுக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது.
- 1978-ஆம் ஆண்டு, ஆகஸ்டு 18 அன்று இந்தியப் பாராளுமன்றத்தால் இந்தியக் கடலோரக் காவல்படைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு உடனடியாக அது நடைமுறைக்கு வந்தது. இந்த சட்டம் அப்படையின் கடமைகளையும் செயல்களையும் தெளிவுபடுத்துகின்றது.
- 42-வது கடலோரக் காவல்படை தினக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக சென்னையில் பொதுமக்களின் மத்தியில் விளையாட்டு மற்றும் உடல்தகுதி


ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வினைப் பரப்பும் நோக்கில் ஒரு மிகப்பெரிய நிகழ்ச்சியான "அலையைக் கடக்கும் உடற்தகுதி சவால்" என்பது நடத்தப்பட்டது.




## இதரச் செய்திகள்

### தனிம அட்டவணைக்கான சர்வதேச வருடம்

- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையும் யுனெஸ்கோவும் இணைந்து 2019-ஆம் ஆண்டை வேதியியல் மூலக்கூறுகளுக்கான தனிம அட்டவணைக்கான சர்வதேச ஆண்டாக அறிவித்திருக்கின்றது.




- இந்த வருடம் அந்த அட்டவணையை உருவாக்கிய டிமிட்ரி மென்டிலீவ் என்பவரின்

150-வது பிறந்த தினத்தோடுப் பொருந்திப் போகும்.

---------------